கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலை கலாச்சார பீடம்

பொதுக்கலைமாணித் தேர்வு (2009/2010) பகுதி – I (ஜனவரி 2013)

GEO 201 சூழல் புவியியல்

10 JUN 2013
...TERN UNIVERSITY, S...

நேரம் - 3 மணித்தியாலங்கள்

எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு விடைதருக.

---

1. "சூழல்" என்பதனை வரையறை செய்து வெவ்வேறுபட்ட சூழல் தொகுதிகளில் உயிரின, உயிரற்ற கூறுகளுக்கிடையே காணப்படும் இடைத்தொடர்பினை பொருத்தமான விளக்கப்படங்களின் துணையுடன் விளக்குக.

(25 புள்ளிகள்)

2. அ) மண்ணுருவாக்கக் காரணிகள் எவையெனக் குறிப்பிட்டு இக் காரணிகள் மண்ணுருவாக்கத்திற்கு எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றன என்பதனை விளக்குக.

(15 புள்ளிகள்)

ஆ)மண்ணின் படையடுக்குகளை (Soil layers) புனையாவரிப் படமொன்றின் மூலம் எடுத்துக்காட்டி முக்கிய மண்படையடுக்குகளில் காணப்படும் மண்ணின் பிரதான இயல்புகளைச் சுருக்கமாக விபரிக்குக.

(10 புள்ளிகள்)

3. அ) புவிநடுக்கம் என்பதனால் கருதப்படுவது யாது? புவிநடுக்கத்திற்கான காரணிகளைக் குறிப்பிடுவதுடன் புவிநடுக்க அலைகளின் (Seismic waves) இயல்புகளையும் தருக.

(12 புள்ளிகள்)

ஆ) பசுபிக் புவிநடுக்க வலயத்தில் அண்மைக் காலங்களில் இடம்பெற்று வந்த முக்கிய புவிநடுக்க நிகழ்வுகளைக் குறிப்பிட்டு, அவை ஏற்படுத்திய சூழல் பாதிப்புக்களையும் ஆராய்க.

(13 புள்ளிகள்)

4. அ) பச்சைவீட்டு வாயுக்களின் (Green house gases) செறிவு வளிமண்டலத்தில் அதிகரிப்பதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு, அவற்றின் அண்மைக்காலப் போக்கு எவ்வாறு காணப்படுகின்றது என்பதனை எடுத்துக் காட்டுக.

(12 புள்ளிகள்)

ஆ) பச்சைவீட்டு வாயுக்களின் செறிவு அதிகரிப்பதனால் ஏற்படக்கூடிய விளைவுகளையும் அவற்றைத் தடுக்க முன்வைக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளையும் பரிசீலிக்குக.

(13 புள்ளிகள்)

5. இயற்கை மற்றும் மனிதனால் தூண்டப்படும் அனர்த்த நிகழ்வுகளை பட்டியற்படுத்துக. நீர் பட்டியற்படுத்திய இயற்கை அனர்த்த நிகழ்வுகளில் ஏதாவது ஒன்றினைத் .தெரிவு செய்து அதன் தோற்றத்திற்கான அடிப்படைகள், அவற்றினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் எதிர் காலத்தில் அத்தகைய பாதிப்புக்களைக் குறைக்க முன்னெடுக்கக்கூடிய நடவடிக்கைகள் பற்றி நுணுக்கமாக ஆராய்க

(25 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினிற்கு** விளக்கக் குறிப்புரை எழுதுக.

அ) சூழல் தாக்க மதிப்பீட்டின் முக்கியத்துவம்.

ஆ) பாலைவனமாதல்.

இ) இலங்கையில் ஈரநில முகாமைத்துவம்.

ஈ) கடல்மட்ட உயர்வும், கரையோர நாடுகள் எதிர்நோக்கும் சவால்களும்.

(12.5 X 2 = 25 புள்ளிகள்)